**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 527/2025**
**வழக்கு சாட்சி PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாசூல் அசரப் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | கோதர் பாவா | தொழில் | : | ேஹாட்டல் தொழில் |
| கிராமம் | : | முதலியார்பட்டி | வயது | : | 41 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 11.02.2026

**(2ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. இதர எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் முதலியார்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் ேஹாட்டல் தொழில் செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியாது. 2013ம் வருடம் ஒருநாள் நான் ேஹாட்டலில் இருக்கும் போது போலீசார் வந்து என்னிடம் கையெழுத்து கேட்டார்கள், நான் போட்டு கொடுத்தேன். இந்த வழக்கு சம்பவம் குறித்து எனக்கு வேறு எதுவும் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது. அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 23.09.2013ம் தேதி, மதியம் 01.00 மணிக்கு 1ம் எதிரி எனது கடையில் சாப்பிட்டு விட்டு பணம்

கொடுக்காததினால் பணத்தை கேட்டபோது எதிரி என்னை பார்த்து அசிங்கமாக பேசினார் என்றால் சரியல்ல. பின்னர், அன்றிரவு 09.00 மணிக்கு எதிரிகள் அனைவரும் எனது கடைக்கு வந்து என்னை கம்பால் அடித்து காயம் ஏற்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. என்னையும், கடையில் வேலை செய்பவர்களையும் எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தது சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்து விட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.12 14:25:40 +0530